சாட்சிய வாக்குமூலம்

(கு.வி.மு.ச.அத்தியாயம் 23)

முதல் கூடுதல் உதவி அமர்வு நீதிமன்றம், ஈரோடு மாவட்டம்

அமர்வு வழக்கு எண்.102/2017

2025ம் ஆண்டு டிசம்பர் மாதம் 12–ம் தேதி நாள் அரசு தரப்பு சாட்சியாக அ.த.சா.–13வது சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1968ம் ஆண்டு 54 வது சட்டத்தில் உள்ள 5(2) பிரிவின்படி ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது. 1,2 எதிரிகள் ஆஜர்.3ம் எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை அவர் கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனு அனுமதிக்கப்பட்டது.அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர் இல்லை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | துளசிமணி | மாவட்டம் | : | |
| த/பெ.பெயர் | : | சென்னியப்பன் | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| வட்டம் | : | | | | |

<u>முதல் விசாரணை:</u>

1. நான் 30.04.2019ல் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக ஈரோடு தாலூக்கா காவல் நிலையத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றேன். கடந்த 18.06.2014 அன்று அதிகாலை 2 மணி அளவில் ஈரோடு வடக்கு காவல் நிலைய அலுவல் பொறுப்பில் இருந்த போது வாசுதேவன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகாரை பெற்று நிலைய குற்ற எண்.340/2014 சட்டப்பிரிவு 174 கு.வி.மு.ச. படி முதல் தகவல் அறிக்கை இவ்வழக்கு சம்மந்தமாக பதிவு செய்தேன்.

2. அ.சா.1ன் புகாரையும் அதனுடன் இணைந்த முதல் தகவல் அறிக்கையும் கனம் குற்றவியல் நீதிமன்றம் ஈரோடு–1 அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். மேலும் மேற்கண்ட புகாருடன் முதல் தகவல்அறிக்கையை ஈரோடு வருவாய் வட்டாச்சியர் II அவர்களுக்கு அனுப்பி வைத்தேன் மற்ற அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். புலன் விசாரணைக்கு வேண்டி காவல் ஆய்வாளருக்கு பார்வைக்காக மேற்கண்ட புகாருடன் முதல் தகவல் அறிக்கை எடுத்து வைத்தேன். மேலும் மேற்கண்ட தேதியில் வாசுதேவன்

தன் மகன் இறந்த இழப்பின் காரணமாக பதற்றத்தில் இருந்ததால் அவரால் எழுத முடியாத காரணத்தினால் என்னுடன் இருந்த காவலர் உதவியுடன் அ.சா.1 ஆன வாசுதேவன் சொல்ல சொல்ல காவலர் புகாரை எழுதி பதிவு செய்து கொண்டார். அதன் பிறகு அந்த புகாரை அ.சா.1 ஆன வாசுதேவனுக்கு கொடுத்து படித்து பார்த்து விட்டு வாசுதேவன் தன்னுடைய புகாரில் கையொப்பமிட்டார். மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்களை அழைத்து அவர்கள் ஆஜர் ஆகவில்லை என்பதால் எனவே குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை என்ற காரணத்தினால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்படுகிறது.